# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2008/30 - 2017 මාර්තු මස 03 වැනි සිකුරාදා - 2017.03.03

*2008/30 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 03 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 1/2012* (II)

**1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில் நீரியல் உயிரின வளங்கள் சட்டம்**

*1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கடற்றொழில் நீரியல் வளங்கள் சட்டத்தின், 61 (1) (த இ) மற்றும் (த ஈ) பிரிவின் கீழ், கடற்றொழில் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

மஹிந்த அமரவீர,
கடற்றொழில், நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சர்.

கொழும்பு,
*2017, பெப்புருவரி 27.*

**ஒழுங்குவிதிகள்**

*1.* இவ்வொழுங்குவிதிகள், *2016* ஆம் ஆண்டு, இலங்கை நீர்ப்பரப்பினுள் மீன் மற்றும் நீர்வாழ் உயிரின வளங்களை பேணிக்காத்தல் ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

*2.* ஆள் எவரும் இலங்கை நீர்ப்பரப்பினுள் நேரடியாகவோ அல்லது நேரடியாகவல்லாமலோ கைத்தொழில் அல்லது வீட்டுக் கழிவுகளை அகற்றுதல் ஆகாது.

*3.* ஆள் எவரும் இலங்கை நீர்ப்பரப்புகளினுள் மீன் மற்றும் நீர்வாழ் உயிரின வளங்களிற்கு அழிவை ஏற்படுத்துகின்ற முறை ஒன்றில் ஏதேனும் தீழ்ப்பாக்கியை, கழிவை, வெளிக் கழிவுப் பொருளை கொட்டுதல் ஆகாது என்பதுடன் கடற்பரப்பை நிரப்புதலோ அல்லது மீட்டெடுத்தலோ ஆகாது.

*4.* ஆளெவரும் இலங்கை நீர்ப்பரப்பிற்கு அருகாமையிலுள்ள கரையோரப் பகுதியில் அல்லது ஏதேனும் இடப்பரப்பில் வளர்ந்துள்ள சதுப்புநில சூழல் முறைமையை அகற்றுவதில், வெட்டுவதில் அல்லது மாற்றுவதில் ஈடுபடுதல் ஆகாது.

*5.* ஆளெவரும் இலங்கை நீர்ப்பரப்பினுள் மீன் இனங்களை பேணிக்காப்பதற்கு அல்லது அதற்கு அருகாமையிலுள்ள கரையோரப்பகுதியை பேணிக்காப்பதற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்துகின்றதான ஏதேனும் செயற்பாட்டில் ஈடுபடுதலாகாது. எவ்வாறாயினும் பணிப்பாளர் தலைமையதிபதி ஏதேனும் தீங்கு விளைவிக்காத ஏதேனும் செயற்பாட்டுக்கென அவதானிக்கப்படுவதற்கு தேவைப்படும் நிபந்தனைகளைக் கொண்டுள்ள அனுமதிப்பத்திரம் ஒன்றை வழங்கலாம்.

*6.* இவ்வொழுங்குவிதிகளில்–

"இலங்கை நீர்ப்பரப்பு" ஆனது 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்திலுள்ளதான அதே கருத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

"கழிவு" என்பது, திண்ம திரவ அல்லது வாயு வடிவத்தில் நேரடியாகவோ அல்லது நேரடியாகவல்லாமலோ வெளியேற்றப்படும் பொருட்கள் எனப் பொருள்படும்.

*3- 834*


1A - PG 3430 — 2757 (2017/03) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*